விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 22 செவ்வாய்க்கிழமை (05.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 168

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## சகோதரர்கள் உட்பட மூவர் நல்லூரில் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

கோயில் வீதி, யாழ்.நல்லூர் யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்திற்கு அருகாமையில் நேற்று பிற்பகல் 12.50 மணியளவில் 3 இளைஞர்கள் இனந்தெரியாதோரினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் இம் மூன்று இளைஞர்களும் அவ் வீதியூடாகச் சென்று கொண்டிருக்கையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த சகோதரர்களான சோதிராஜா நிஷாந்தன் (வயது-27), சோதிராஜா சுதர்ஷன்(வயது-21) மற்றும் கட்டப்பிராய் தோப்பைச் சேர்ந்த சந்திரகுமார் சந்துரு (வயது-21) ஆகிய மூவருமே ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா,

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## வவுனியாவில் இருவர் சுட்டுப் படுகொலை

(வவுனியா)

வவுனியாவில் மருத்துவ சிகிச்சைக்குச் சென்ற இரு தமிழர்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பம்மைமடு ஆயுர்வேத மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காகச் செட்டிக்குளம் வாரிக்குட்டியூரைச் சேர்ந்த இருவர் மருத்துவமனையில் இருந்து காணாமல் போன நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.


பம்பைமடு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு சென்ற நிலையில் காணாமல் போன இவர்களை உறவி (06 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் செயற்பாடுகளை முடக்க சர்வதேச நாடுகளின் ஆதரவு தேவை

## சிங்கப்பூரில் அமைச்சர் றோகித தெரிவிப்பு

(சிங்கப்பூர்)

விடுதலைப்புலிகளின். செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு தேவையென வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம வேண்டுகோள் விடுத்துள்ளார். சிங்கப்பூரில் நடைபெற்று வரும் 6 ஆவது ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற அமைச்சர், ரொய்ட்டருக்கு இதனைத் தெரிவித்தார். (06 ஆம் பக்கம் பார்க்க)



இரத்தினபுரியில் சடலமாக மீட்கப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரில் சென்று அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## அரசுக்கு எதிராக ஜே.வி.பி. நேற்று ஆர்ப்பாட்டங்கள்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருள்களின் விலையுயர்வைக் கண்டித்து இனவாதக் கட்சியான ஜே.வி.பி. நேற்று பல இடங்களில் ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளது.

கொழும்பிற்கான ஆர்ப்பாட்டம் நுகே

ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

முக்கிய நகரங்களில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பொருள்களின் விலையுயர்வால் மக்களு

ளின் விலையுயர்வைக் கண்டித்து இன வாதக் கட்சியான ஜே.வி.பி. நேற்று பல இடங்களில் ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளது.

கொழும்பிற்கான ஆர்ப்பாட்டம் நுகே கொட பகுதியிலும் கம்பஹா மாவட்டத்திற் கானஆர்ப்பாட்டம் கிரிபத்கொட பிரதேசத்தில் இடம்பெற்றதுடன் மேலும்பல இடங்களில் முக்கிய நகரங்களில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஜே.வி.பியின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பொருள்களின் விலையுயர்வால் மக்களு க்கு ஏற்பட்டுள்ள சுமையை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கோரியே இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளன. (ச)

இரத்தினபுரியில் சடலமாக மீட்கப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பணி யாளர்களின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரில் சென்று அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

# நாட்டு நலனுக்காகச் சகலரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை

(கொழும்பு)

குறுகிய கட்சி அரசியல் செயற்பாடுகளை விட்டு விட்டு நாட்டு நலனுக்காக சகலரும் ஒன்றுபட வேண்டும் என்பதே மதத் தலை வர்களினதும் பொதுமக்களினதும் விருப்ப மாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயகக் குழு வின் முதலாவது பேராளர் மாநாடு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. இதற்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள விசேட வாழ்த்துச் செய்தியி (06 ஆம் பக்கம் பார்க்க)

# அரச சமாதானச் செயலகத்திற்கு விரைவில் புதிய பணிப்பாளர்

இலங்கை சமாதான செயலகத்திற்கு விரைவில் புதிய பணிப்பாளர் நியமிக்கப்பட விருப்பதாக அரசை ஆதாரம் காட்டி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் முன்னாள் ஓம்பூட்ஸ் மனும் பொதுச் செயலாளருமான சாம் விஜய சிங்கவின் புதல்வரும் இலங்கை தாராண் மைவாதக் கட்சியின் தலைவருமான ரஜீவ விஜயசிங்கவுக்கு இப் பதவி வழங்கப்படவி ருப்பதாக அந்தத் தகவல் மேலும் தெரிவிக் கின்றது.

தற்போதைய பணிப்பாளரான பாலித கோஹகன்ன கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சின் செய லாளராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவரது பதவி பறிக்கப்படவுள்ளது.

இதேவேளை இலங்கை சமாதானச் செயலகத்தின் துணைப்பணிப்பாளராக இருந்த கேதீஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட் டிருந்த நிலையில், அந்தப் பதவி வெற்றிடத் திற்கு சி.எஸ்.பூபாலசிங்கம் நியமிக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ச)

# மன்னாரில் நேற்று கிபீர் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் வலயன்கட்டு மக்கள் குடியிருப் பின் மீது வான்படையின் கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன. நேற்று முற்பகல் 11 மணியளவில் இரு கிபீர் விமா னங்கள் இத் தாக்குதலை நடத்தின.

படையினர் எறிகணைத் தாக்குதல் நடத்தி வலயன்கட்டுப் பகுதியிலிருந்து மக்க ளை வெளியேற்றிவிட்டுத் தொடரான எறி கணைத் தாக்குதலை (06 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு விற்பனை தொடர்பில் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்குக் கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பொருள்கள் சம்பந்த மாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுங்கு பற்றி நேற்றுக் காலை 10 மணிக்கு மேலதிக அரசாங்க அதிபர், உதவிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக் களம், உதவி ஆணையாளர், கமநல அபி விருத்தித் திணைக்களம்,பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகஸ் தர்கள், யாழ்.வணிகர் கழகம், யாழ். வர்த்தக தொழில்துறை மன்றம், ஈஸ்வர பகவான் கம் பனி லிமிட்டெட், நியூ லங்கா ரேடர்ஸ் ஆகியோ ருடன் கலந்துரையாடலொன்று அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் நடாத்தப் பட்டது. இதில் பின்வரும் தீர்மானங்கள் எடுக் கப்பட்டன.

- பொருள்கள் கொண்டு வருவதற்கு முன்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துடன் செய்து கொண்ட ஏற் (06 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் தாக்கினால் அது சட்டவிரோத செயற்பாடாகவே கருதப்படும்

## மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் பலர் இன்றைய காலகட்டத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் சிக்கியவர்களாக உள்ளனர். அடிப்படை மனித உரிமை தொடர்பான விளக்கம் இன்மையே இவ்வாறான நிலைமைகளுக்கு காரணமாக அமைகின்றது.

சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் தாக்கினால் அது சட்டவிரோத செயற்பாடாகவே கருதப்படும் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தின் சட்டப்பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் ஜெயகுமார் தங்கவேலு தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மேலும் உரைநிகழ்த்துகையில் கூறியதாவது;

இன்றைய கால கட்டத்தில் மக்கள் சட்டம் பற்றி நன்கு அறிந்துள்ளனர். 1978 ஆம் ஆண்டிலேயே அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்குகளை நீதிமன்றங்களில் தாக்கல்செய்யக்கூடிய நிலைமை தோன்றியது.

இதற்கு முன்னர் இந்த நிலைமை அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய காலகட்டத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கில் சிக்கிய பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவு. எனினும் இன்றைய காலகட்டத்தில் பொலிஸ் அதிகாரிகள் பலர் அடிப்படை உரிமை மீறல் வழக்கில் சிக்கியவர்களாகவே உள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகளுக்கு அடிப்படை உரிமை தொடர்பான அறிவு இன்மையே இவர்கள் அதிகளவில் இதில் சிக்குவதற்கான காரணமாகும். அடிப்படை மனித உரிமை ஒரு நாட்டில் மீறப்படுமாயின் அந்த நாடு சர்வதேசத்தின் கவனத்திற்கு உள்ளாகும்.

சட்டத்தின் அடிப்படையில் சந்தேகநபரை தாக்கினால் அது சட்டவிரோதமாகவே கருதப்படும். பொலிஸ் அதிகாரி சட்டவிரோத நடவடிக்கையினையே மேற்கொள்கின்றார் என்றே அது பொருள்படும்.

ஒருவருக்கு தகாதவார்த்தைப்பிரயோகத்தினை மேற்கொள்ள பொலிஸாருக்கு உரிமையில்லை. ஒருவர் தவறு செய்தால் அவரை கைதுசெய்யுங்கள். சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனையை பெற்றுக்கொடுங்கள். மனித உரிமையை மீறும் உரிமை பொலிஸாருக்கு இல்லை.

மனித உரிமைகள் மீறப்படாமல் செயற்பட்டால் மக்கள் என்றும் மக்களுடன் இருப்பர். பொலிஸ் நிலையத்திற்கு ஒருவர் தேவையினை நிறைவேற்றிக்கொள்ள வந்தால் அதனை வினைத்திறனுடன் நிறைவேற்றுங்கள்.

இராணுவம், பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுக்கு தண்டனை வழங்கும் உரிமை இல்லை. அந்த உரிமை நீதிமன்றத்திற்கு மட்டுமே உள்ளது.

சந்தேக நபர் ஒருவரை சட்டத்தின் அடிப்படையிலேயே கைதுசெய்யவேண்டும். சட்டத்திற்கு புறம்பாக எந்தவொரு செயற்பாட்டினையும் மேற்கொள்ளமுடியாது. குற்றவாளிக்குரிய தண்டனை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொலிஸாரின் கடமை சாட்சிகளை சேகரித்து நீதிமன்றத்தால் அவர் குற்றவாளியா அல்லது சுத்தவாளியா என்பது தொடர்பாகவே சாட்சிகளை தேடவேண்டும்.

ஒருவரை குற்றவாளியாக்குவதற்கு மாத்திரம் சாட்சிகளை தேடக்கூடாது. ஒருவருக்கு எதிராக முறைப்பாடு கிடைத்தால் அவரை குற்றவாளியாக்க சாட்சிகளை தேடவேண்டாம். பொய்யான சாட்சிகளை உருவாக்கக்கூடாது. சட்டவிரோதமான முறையில் பெற்றுக்கொள்ளும் சாட்சிகளினால் பயன் இல்லை. சட்டரீதியான சாட்சிகளை பெற்றுக்கொண்டால் நீதிமன்றம் உங்களை பாராட்டும் என்றார். (ச-5)

# நயினாதீவு நாகபூசணி அம்மன் உற்சவ காலத்தில் பக்தர்கள் சோதனையிடப்படுவர்

## செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. உற்சவ கால நடைமுறைகள் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபால் தலைமையில் பிரதேச செயலகத்தில் கூட்டமொன்று இடம் பெற்றது.

மேற்படி கூட்டத்தில் காரைநகர் கடற்படை கட்டளை அதிகாரி,கடற்படையின் நயினாதீவுப் பகுதிப் பொறுப்பாளர் ,ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய அதிகாரி,வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள்,தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உற்சவ தினங்களில் வழமைபோல இம்முறையும் குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உற்சவ காலத்தில் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் அனைவரும் இப் பகுதியில் உள்ள சோதனை முகாம்களில் பரிசோதனை செய்யப்பட்ட பின்பே ஆலயத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

அத்தோடு நயினாதீவு இறங்குதுறையில் பக்தர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டைகளை அங்குள்ள படையினரிடம் கொடுத்து இலக்க சிட்டை பெற்றுச்செல்ல வேண்டும். ஆலயத்தில் இருந்து திரும்பும் போது அந்த இலக்கச் சிட்டையை கொடுத்து தங்கள் அடையாள அட்டைகளை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சோதனை நடவடிக்கைகள் தாமதமின்றி நடைபெறுவதற்காக சோதனை நிலையங்களில் கூடுதலான படையினர் சேவைக்கு அமர்த்தப்படுவதுடன் குறிகாட்டுவான்-நயினாதீவு இறங்கு துறைகளில் வழமைபோல் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே படகுகளில் பிரயாணம் செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

எக்காரணம் கொண்டும் மேலதிகமாக பக்தர்களை படகுகளில் ஏற்றிச்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. படகுகளில் பயணிகளுக்கான பாதுகாப்புக் கவசங்கள் அவசியம் இருக்கவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

உற்சவ தினங்களில் கலந்து கொள்ளும் அடியார்கள் அனைவருக்கும் வழமை போல் நயினாதீவு அமுதசுரபி அன்னதான மடத்தில் மதிய உணவு வழங்கப்படும். (ச-5)

# பொருட்களின் விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்

## வணிகர் கழகம் அறிவிப்பு

அரசாங்க அதிபருடனும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளினுடனும் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய சகல வர்த்தக நிலையங்களிலும் பொருட்களின் விலைப்பட்டியல் நுகர்வோரின் பாவனைக்கு வைக்கப்பட வேண்டுமென யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

விற்பனை செய்யப்படும் சகல பொருட்களுக்கும் தமது வர்த்தக ஸ்தாபனத்தின் பெயரில் அச்சிடப்பட்ட பற்றுச்சிட்டைகள் தெளிவாக எழுதப்பட்டு வழங்கப்படவேண்டும். கடையின் பெயர் பொறிக்கப்படாத பற்றுச் சிட்டைகள் வழங்கப்படக்கூடாது.

நுகர்வோருக்கு விற்பனை செய்யாது பொருட்களை பதுக்கிவைக்கக்கூடாது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வணிகர் கழகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தீர்மானங்களை எதிர்வரும் காலங்களில் பின்பற்றி தங்கள் மீது எடுக்கும் சட்ட நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த ஏரம்பமூர்த்தி தயாநிதி என்பவரது 808173484 V இலக்க தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (ச-3)



யாழ்.வண்ணை சிறாம்பியடி வேப்பங்காளி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வில் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தனுக்கு 'மகாகவிசாகரம்' என்னும் பட்டத்தை ஆலய பரிபாலன சபை வழங்கிக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் நேர்முகத் தேர்வுக்கு 31 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னுரிமை அடிப்படையில் ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந் நேர்முகப்பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 31 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். இந் நேர்முகப் பரீட்சார்த்திகளுக்கான கப்பல் ஏற்பாடுகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் டாக்டர் (திருமதி) சி.துரைரட்ணத்தினால் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு;

எஸ்.தர்சினி,எம்.பகீரதன்,எம்.நாமகள், எஸ்.சிவகௌரி,எஸ்.துஷ்யந்தி,எஸ்.கிளமென்றீனா,பி.சிறீகுமார்,எஸ்.சரஸ்வதி,கே.பாமினி, எஸ்.அருள்மொழி,பி.வடிவேற்கரசன்,கே.கார்த்தியாயினி,எஸ்.லோஜனா,எஸ்.கனகசுந்தரம், ஆர்.கேதீஸ்வரன்,பி.தபோதினி,ஆர்.கமலரஞ்சினி,கே.கேமலதா,எஸ்.சுசிவதனி,என்.சொரூபி,எஸ்.துசித்தா,எஸ்.கஜமாலா, கே.சுலோசனா,எஸ்.சிவச்செல்வன்,என்.விடியாஜெனி,எஸ்.சுகந்தினி,வி.ஆனந்தஜோதி, எஸ்.கலைவாணி,எம்.அனுசியா, கே.றஜித்தா, கே.அன்பரசி. (ச)

SATS - TECH 7- வது ஆண்டில்...

DTH DISH

இதோ! விரல் நுனியில் உலகை உங்கள் வசம் தருகின்றோம்.சாதாரண டீவி அன்ரனாவை பொருத்தும்விலைக்கு அண்மையாக சன் டீவி/சன் நியூஸ்/ஜெயா டீவி/பொதிகை, DD Sports, Head Lines Today, DD 1 உட்பட்ட 44 சனல்கள் Digital DVD தரத்துடன் மாதாந்த கட்டணம் எதுவுமின்றி கண்டு களிக்கலாம்.

KU BAND டிஸ் அன்ரனா சிஸ்டம் உத்தரவாதத்துடன் Rs.9000/=ல் இருந்து

உத்தரவாதம் நிபந்தனைக்கு உட்பட்டது

மேலதிக விபரங்களுக்கு:-
SATS-TECH ENGINEERS
இல.182, கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டி சேச் அருகில்,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

Phone:- (021)222 5908
Hot Line 0777 710785

(133)

# உலகின் விலையுயர்ந்த மண்டையோடு 98 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி

இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல ஓவியக் கலைஞர் டாமியன் ஹிர்ஸ்ட் வைரங்கள் பதிக்கப்பட்ட 98 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மண்டையோடொன்றை காட்சிப்படுத்தி பார்வையாளர்களை அசத்தியுள்ளார். இதுவே உலகின் மிக விலையுயர்ந்த மண்டையோடாக கருதப்படுகின்றது. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 35 வயதான ஐரோப்பியர் ஒருவருக்குச் சொந்தமான இம் மண்டையோட்டில் 8 ஆயிரத்து 601 வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இம் மண்டையோட்டின் மையப் பகுதியில் பதிக்கப்பட்டுள்ள பெரிய இளஞ்சிவப்புவர்ண வைரமானது எட்டு மில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட பெறுமதியுடையதாகும்.

இந்த விலையுயர்ந்த கலைப்படைப்பு குறித்து ஓவியக்கலைஞர் டாமியன் ஹர்ஸ்ட் விபரிக்கையில், 'இது நாங்கள் என்றென்றும் வாழப் போவதில்லை என்பதை எடுத்துக்காட்டுவதுடன், இறப்பது தொடர்பான வெற்றி உணர்வையும் பிரதிபலிப்பதாகவுள்ளது' என்று தெரிவித்தார். இந்த மண்டையோடானது மத்திய லண்டனில் உள்ள வைட்கியூப் கலைக் கூடத்தில் மிகுந்த பாதுகாப்பின் மத்தியில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# காசம் அற்ற சுவாசம் நோக்கி....

இன்று உலகிலுள்ள காற்றினாற் பரவுகின்ற நோய்களில் மிக முக்கியமானது காசநோயாகும். இந்த நோயானது வயது வேறுபாடின்றி தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. உலகளாவிய ரீதியில் ஆண்டொன்றிற்கு பல மில்லியன் மக்கள் காசநோய்த் தொற்றிற்குள்ளாகின்றனர். அதிக சனத்தொகையடர்த்தி கொண்ட வளர்ந்து வரும் இலங்கை போன்ற வறுமையான நாடுகளிலுள்ள மக்கள் அதிகளவாக இக் காசநோயினாற் பீடிக்கப்படுகின்றார்கள்.

இலங்கையைப் பொறுத்த வரை 2006ம் ஆண்டில் 8481 நோயாளிகள் அடையாளங் காணப்பட்டனர். இவர்களுள் 361 பேர் யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்டவர்களாவர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை 2005ஆம் ஆண்டில் 280 பேரும் 2006 ஆம் ஆண்டில் 361 பேரும் இந்த ஆண்டான 2007இன் முதற்காலாண்டில் இது வரை 77பேரும் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

காசநோய் பற்றீரியா எனப்படும் நுண் கிருமியால் ஏற்படுகிறது. இது பரம்பரை நோய் அல்ல. இந்த நோய் குறிப்பாக மைக்கோ பற்றீரியா ரியூபகுலோசிஸ் எனப்படும் கிருமியால் ஏற்படுகிறது. இந்நோயானது அதிகமாக நுரையீரல்களையே தாக்குகின்றது. ஆனாலும் நுரையீரல்களை விடுத்து உடலின் பிற பாகங்களையும் தாக்கக்கூடிய வல்லமையுடையது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இக்கிருமியானது நோயாளி இருமும் போதோ, தும்மும்போதோ ,சிரிக்கும்போதோ அல்லது கதைக்கும்போதோ வெளியிடப்படும் காற்றில் நுரையீரல்களில் இருந்து வாயினூடான சளி நீர்த்துளிகைகள் மூலமாகி) கலந்து விடப்படுகின்றன. இவ்வாறு காற்றில் தூவப்பட்ட கிருமிகள் சுவாசத்தின் மூலமாக சுகதேகி ஒருவரின் நுரையீரல்களை அடைகிறது. ஆனாலும் இக் கிருமிகள் நேரடிச் சூரிய ஒளியினால் அழிந்துவிடக் கூடியன.

காற்றில் விடப்பட்ட கிருமிகள் போதிய சூரிய ஒளி இல்லாத பட்சத்தில் பலமணி நேரங்கள் உயிர்வாழக்கூடியன. நன்கு காற்றோட்டம் கூடிய இடங்களில் கிருமியின் செறிவு ஐதாக்கப்படுவதாலும் சூரிய ஒளியினால் அதன் வாழ்தகவு அற்றுப்போவதாலும் நோய்த் தொற்றுக்கான சாத்தியமானது இல்லாது போகின்றது. அடைக்கப்பட்ட, சூரிய ஒளி படாத, காற்றோட்ட வசதி அற்ற இடங்களில் உதாரணமாக காற்றோட்டம் குன்றிய சமையலறைகள், தொழிற்சாலைகள், நெருக்கமான குடிமனை உள்ள இடங்களில் வாழ்வோர், அகதிமுகாம்கள், சிறைச்சாலைகள் மற்றும் பொது மலசலகூடம் போன்றவற்றில் கிருமித் தொற்றிற்கான வாய்ப்புகள் அதிகமாக்கப்படுகின்றன. மேலும் மதுபானப் பாவனையுள்ளோர், புகைப்பிடிப்போர், போதைப் பொருளுக்கு அடிமையானோர், சலரோக நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், மந்தபோசாக்குள்ளோர் ஆகியோரிடையேயும் அதிகளவு தொற்றக்கூடியதாயுள்ளது.


இவ்வாறு நோய்த் தாக்கத்திற்குள்ளாகும் ஒருவர் ஒரு வருடத்தில் 10–15 சுகதேகிகளை காசநோயாளிகளாக்கும் ஆபத்தைக் கொண்டிருப்பார் .மருந்து எடுக்காத நோயாளிகளில் 50% மானோர் 5 வருடங்களுக்குள் இறந்து விடுவர். மிகுதி 25% மானோர் சுயமாக நோயிலிருந்து குணமடையும் அதேவேளை 25% பேர் நோய்க்காவிகளாகச் செயற்பட்டு பிறருக்கும் நோய்த்தொற்ற வழிகோலுவர். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் நோய்த் தொற்றிற்குள்ளானவர் நோயினது குணங் குறிகளை வெளிக்காட்ட ஓரிரண்டு வாரங்களில் இருந்து ஒரு சில வருடங்கள் வரை செல்லலாம். இவ்வாறாக நோய்த்தொற்றிற்குள்ளான ஒருவரின் நோய்க்கிருமியானது எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்பதனைப் பார்ப்போம்.

வெளியில் உள்ள கிருமியானது சுவாசத்தின் மூலமாக நுரையீரல்களை அடைகின்றது. இவ்வாறு நுரையீரல்களை அடையும் கிருமியை சுவாசப் பாதையின் தற்காப்புப் பொறிமுறையின் ஒரு கட்டமான திண்குழியங்கள், தமது திண்குழியச் செயலாற்றுகை மூலமாக (கிருமிகளை விழுங்குதல்) உள்ளெடுக்கின்றன. இவ்வாறாக திண்குழியத்தின் மூலமாக உள்ளெடுக்கப்படும் நோய்க்கிருமியானது திண்குழியத்தால் உடனடியாக அழிக்கப்படலாம் அல்லது உடலின் பிறபாகங்களிற்கும் குருதியூடு காவிச் செல்லப்படலாம். இதேவேளை கிருமியானது தன்னைப்பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு தற்காப்புப் பொறிமுறையான திண்குழியத்தின் உள்ளான அமில,கார நடுநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதன் முதிர்ச்சியை உறைய வைக்கின்றது. இத் தற்காப்பானது எமது நோய் எதிர்ப்புச் சக்தியினின்று தப்பித்துக்கொள்ள காச நோய்க்கிருமி கொண்டிருக்கும் ஒரு மூலோபாயமாகும். இம் முதிர்ச்சித் தடையானது கிருமியின் திண்குழியத்தின் உள்ளான நீடித்த நிலைப்பிற்கு வழி கோலுகின்றது.

இதேவேளை எமது உடலின் நோயெதிர்ப்புப் பொறிமுறையானது தூரித மாக்கப்பட்டு மேலதிக தொற்றுக்களை அழிக்கக் கூடிய வகையில் முனைப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான பிந்திய நோய் எதிர்ப்பு சக்தியின் வெளிப்பாடாக ஏற்கனவே திண்குழியத்தால் சிறைப்பிடிக்கப்பட்ட கிருமிகளைச் சூழவும் ஒரு மேலதிக சுவரை ஒத்த தடுப்பு அரண் போன்ற அமைப்பு உருவாக்கப்பட்டு கிருமிகள் வெளிச்சுற்றோட்டத்திற்கு விடப்படுவது தவிர்க்கப்படுகின்றது.

இச் செயற்பாடானது நிணநீர் முடிச்சுக்களில் நடைபெறுகின்றது. ஆனாலும் நோய்த் தொற்றிற்குள்ளானவர் குறைந்த நோய் எதிர்ப்புச் சக்தியை உடையவர் எனில் மேற்படி பொறிமுறைகள் வினைத்திறன் உடையதாக இராது. எனவே அந்நபர் இலகுவாக காசநோயின் தாக்கத்திற்கு உள்ளாகுவார் . அதேவேளை போதிய நோய் எதிர்ப்புச்சக்தி உள்ள ஒருவரில் இந்த கலத்தடுப்புகளாற் சூழப்பட்ட கிருமி + திண்குழியச் சிக்கலானது வருடக்கணக்கில் நோயை ஏற்படுத்தாது சிறைவைக்கப்பட்டிருக்கும் .

இச் சிக்கலானது உடையும் பட்சத்தில் அது சுவாசப்பாதையின் பிறபகுதிகளிற்கும் கிருமிகளைப் பரப்பும் அபாயத்தை ஏற்படுத்தும் .உடையும் இச்சிக்கலானது கிருமிகளை இரத்தத்தில் கலப்பதால், உடலின் மற்றைய பாகங்களிற்கு அவை இலகுவில் பரவுவதோடு சுவாசப்பரிமாற்றத்திற்கான நன்கு குருதி



யமைப்புச் செய்யப்பட்ட நுரையீரல்களில் முற்றுமுழுதாகவும் பரவலாக்கப்பட்ட காசநோயை உண்டு பண்ணுகிறது. இதனை விடவும் மூளைக்காசம், என்புகள், என்பு மூட்டுகள் , மண்ணீரல், ஈரல், சிறுகுடல், விதை, நிணநீர் முடிச்சு என்பவற்றிற்கும் பரவ ஏதுவாகின்றது.

### காசநோயின் குணங்குறிகள்

காசநோய்த்தாக்கத்திற்குள்ளான ஒருவரிற்கு திடீரென அறிகுறிகள் தென்பட மாட்டாது. நீண்டகாலமாக இருந்துவரும் இருமல் (மூன்று வாரங்களிற்கும் மேலதிகமாக) குறுகிய காலத்திற்குள்ளான அதிக நிறை இழப்பு, இரவுநேரக் காய்ச்சல், இரவு நேர திடீர் வியர்வை, இரத்தம் தோய்ந்த சளி, உணவில் நாட்டமின்மை, உடற்சோர்வு, நெஞ்சுநோவு, மூச்செடுத்தலில் சிரமம் என்பன அதன் குணங்குறிகளாகும். வைத்தியசாலையில் சளியின் மாதிரியை சோதிப்பதன் மூலமே நோயின் நிச்சயத்தன்மையை அறிந்து கொள்ளமுடியும் .சளியில் உள்ள காச நோய்க்கிருமியை நேரடியாக நுணுக்குக் காட்டினூடாக அவதானித்தோ அல்லது சளியிலுள்ள கிருமியை விசேட வளர்ப்பூடகங்களில் வளர்த்து அடையாளங் காண்பதின் மூலமோ நோயின் நிச்சயத்தன்மை உறுதிப் படுத்தப்படும் முன் கையின் நடுப்பகுதியில் தொதுமலாக்கப்பட்ட, வீரியங்குறைந்த, பிரித்தெடுக்கப்பட்ட காச நோய் கிருமிப் புரதங்கள் ஊசி மூலம் நோயாளி என சந்தேகிப்பவருக்கு ஏற்றப்பட்டு அவரது நோய் எதிர்ப்பு சக்தியின் அடிப்படை யில் வைத்தியரால் நோய்த் தன்மையை அறிந்து கொள்ளும் முறையும் உள்ளது. ஆனாலும் இம்முறையில் வழு ஏற்படக்கூடிய வீதம் அதிகமாகும். எல் லாவற்றிற்கும் மேலாக இம்முறை நிச்சயத்தன்மையை உறுதிப் படுத்ததுவதாக கருதாது நோய் நிருணயத் தின் உதவிப் பரிசோதனையாகவே கருதப் படுகின்றது. இச் சளிச் சோதனையானது தொடர்ச்சியான அடுத்தடுத்த நாட்களிற் பெறப் பட்ட மூன்று மாதிரிகளில் மேற்கொள்ளப்படு கின்றது.

எனவே நோயாளி முதற் தடவை வைத்தியசாலைக்கு வரும்போதும், பின்னர் தொடர்ந்து வரும் இரண்டு நாட்களிலும் ஆய்வுகூடப் பரிசோதனைக்காக சளி கொடுத்தல் அவசியமாகிறது.

இச்சளி மாதிரி பெறப்படுகையில் நோயாளி திறந்தவெளியில் ஆட்களினின்றும் விலத்தி அடி நெஞ்சில் இருந்து இருமி சளியை மாத்திரம் கொடுத்தல் வேண்டும் சளி மாதிரி பெறப்பட முன்னர் பின்வரும் சரியான சளி மாதிரியை பெற உங்களுக்கு உதவும். வாயை நன்கு கொப்பளித்த பின்னர் ஆழ மான உட்சுவாசத்தை 2–3 தடவை செய்ய வேண்டும். அடிநெஞ்சில் இருந்து இருமுதல் வேண்டும். தரப்பட்ட பாத்திரத்தை வாயிற்கு மிக அருகில் கொண்டுவந்து பாத்திரத்தின் வெளிப்புறத்தில் படாது வெளியில் சிந்தாது அவதானமாக பாத்திரத்தினுள் துப்ப வேண்டும்.

தர்மசுந்தரம் துஷ்யந்தன்,
25ஆம் அணி,
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

டும். முக்கியமாக சளி மாத்திரமே பாத்திரத் துள் வருதல் மிக மிக அவசியம். எச்சில் அல் லது தடிமன் காரணமாக மூக்கிலிருந்து வடியும் நீர் ஆகியவற்றை சளியுடன் கொடுக்க வேண்டாம் நன்கு இறுக்கமாக பாத்திரத்தின் மூடியை மூட வேண்டும் சரியான முறையில் பெறப்பட்ட சளி மாதிரியானது நன்கு தடித்த தாயும், மஞ்சள் நிறமாயும் , சுமாராக அரைத் தேக்கரண்டி அளவிலும் இருக்கும். (தொடரும்)

# பிற்போக்கு சக்திகளின் செயற்பாடுகளே இன்றைய யுத்தம்

## பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் இடித்துரைப்பு

இலங்கையை முதலில் ஆட்சி செய்தது இராவணன். இவரின் பின் தமிழ் மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர் என்பதையும் இந்நாடும் தமிழர்களின் தேசம் என்பதையும் இனவாதம் பேசுவோர் ஏற்றுக்கொள்ள வேண்டும் . வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி பிரதியமைச்சர் பெ. இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

கழுத்துறை ,எலதுவை, தோட்டமலக் கொட டிவிசன் விளையாட்டு மைதானத்தில் கலைஞர் சிவாஜி கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டகிரிக்கெற் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவா் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் இலங்கை சிங்களவர் தேசம், தமிழரின் தாயகம் தமிழ் நாடு என்றும் நாட்டையாளும் ஏக போக உரிமை சிங்கள மக்களையே சார்ந்ததாகும் என ஜாதிகஹெல உறுமய கட்சியினர் கூறியிருப்பது முற்றிலும் உண்மை என்று ஏற்றுக்கொள்ளமுடியுமானால் இலங்கையை முதலில் ஆட்சி செய்தது இராவணன்.இவரின் பின் பல தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்தனர் என்பதையும் சிங்களவர்களின் பூர்வீகம் விஜயன் மூலமான இலங்கையின் வழித்தோன்றல்களே.

ஆகவே தமிழர்களும் இலங்கையில் வாழும் ஏக போக உரிமை உள்ளவர்கள் என்பதையும் இனவாதம் பேசுவோர் ஏற்றுக்கொள்ள வேண்டும். பல்லின மக்கள் வாழும் நம் நாட்டில் விசேடமாக களுத்துறை மாவட்டத்தில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டியில் சகல இன இளைஞர்களும் கலந்து கொண்டிருப்பதையும் பேதங்களோ வேறுபாடுகளோ அற்ற முறையில் ஐக்கியமாக ஒற்றுமையோடு தமிழ், சிங்கள மக்கள் வாழ்கின்றனர். அதையும் பொறுத்துக் கொள்ள முடியாதவர்களின் பேச்சுக்களே இனங்களுடையியே விபரித விளைவுகளை ஏற்படுத்துகின்றன் அப்படி பேசுபவர்கள் இந்த விளையாட்டுப்போட்டி நடைபெறும் இடத்திற்கு வந்து பார்த்தால் வாய் அடைத்துப்போவார்கள். எனவே அரசியலில் வெற்றி பெற நிதானம் தேவை.

விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற ஐக்கியம் தேவை என்பதை உணரவேண்டும். இனவாத பேச்சுக்களாலும் மதவாத கருத்துக்களாலும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை புரிந்துகொண்டு சிங்கள மக்களை அரசியல் பகடைக்காய்களாக பாவிப்பவர்களுக்கு மக்களே பாடம் புகட்டவேண்டும்.

தமிழ் மக்களுக்கு 'தமிழீழமே தீர்வு' என்ற போராட்ட முடிவுக்கு அவர்களை தள்ளியது யார் ? பேரின வாத பிற்போக்கு சக்திகளின் செயற்பாடுகளின் துர்ப்பாக்கியமே இன்றைய யுத்தம் என்பதை மூடி மறைக்கக் கூடாது.

பௌத்த மதத்தை போதிப்பதற்கு பதிலாக போர்ச்சூழலையும் இனவாதத்தையும் தூண்டுவது தான் புத்தபிரானின் போதனையா? உயிர்களை நேசித்த புத்தபிரானின் புனிதத் தன்மையை மாசுபடுத்தும் விதத்தில் யுத்தத்தை தூண்டி இன,மத ரீதியில் தமிழர்களை நசுக்கி அழிப்பது தான் சகல உரிமையின் பௌத்த கோட்பாடு என்றால் அதற்காக வருத்தப்படப்போவதும் அவர்களே. தமிழர்கள் உலகில் பல நாடுகளின் அந்தந்த நாட்டு சட்டதிட்டங்களுக்குரிய உரிமைகளுடன் வாழும் போது இலங்கையில் மட்டும் ஐநாவின் சட்டங்களுக்கு புறம்பாக இன, மத மொழி ரீதியாக கூறுபோட்டு சிங்களம் என்ற அதிகாரத்தை தமிழர்கள் மீது திணிப்பதற்கு முயற்சிப்பது தான் ஜனநாயகமா? இது தான் மனிதாபிமானமா? சிஹல உறுமயக் கட்சியின் கடும் போக்குள்ள மதவாதிகள் யார்த் தங்களை உணரவேண்டும். இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களின் வரலாறுகளை திரித்துக்கூறி இனவாதம் பேசி கடும் பிற்போக்குவாதிகளை திருப்திப்படுத்தி தமிழர்களுக்கு எதிராக அவர்களை தூண்டிவிடும் கேவலமான அரசியல் நிலைத்து நிற்காது.

பிரச்சினைக்குத் தீர்வு பேச்சுவார்த்தை என்பதை மறந்துபோனவர்கள் 'யுத்தத்தில் வெற்றிபெறுவோம் என்று பகல் கனவு காண்பது நகைப்புக்குரிய அரசியலாகும். இன்றைய நிலைமைகளை புரிந்து கொள்ளாத பக்குவமற்ற தன்மையை இவர்களது செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

மனித உயிர்களையும் உணர்வுகளையும் மதிக்கத்தூண்டும் பௌத்த மதத்தை நித்திக்கும் வகையில் மதத்துடன் அரசியலை கலந்து நாட்டை பிளவு படுத்தத் தூண்டுவது அரசியல் வரலாறு புரியாதவர்களின் கோமாளித்தனமான செயல் என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.

(அ-5)

# இன்று ஒரு தகவல்

## பரிசுச் சீட்டு

அதிர்ச்சியிலே இரண்டுவகை உண்டு. ஒன்று இன்ப அதிர்ச்சி. இன்னொன்று துன்ப அதிர்ச்சி. இவை இரண்டையும் ஏற்படுத்துவது பரிசுச்சீட்டு – அதாவது லாட்டரி சீட்டு.

திடீரென்று ஒரு இலட்சம் ரூபா விழுந்தால் அது இன்ப அதிர்ச்சிதானே! ஆயிரம் ரூபாவுக்கு சீட்டு வாங்கி... அதில் ஒரு சீட்டுக்குக்கூட பரிசு விழவில்லையென்றால் அது துன்ப அதிர்ச்சி!

இந்த லாட்டரி சீட்டுத்திட்டம் எப்போ எங்கே ஆரம்பமானது தெரியுமா?

பதினைந்தாம் நூற்றாண்டிலேயே இது ஆரம்பமாகி விட்டதாம்! முதன் முறையாக ரோமனியர்கள் தான் இதை ஆரம்பித்தார்களாம். அப்போதெல்லாம் பரிசு என்ன தெரியுமா? முதல் பரிசு ஒரு கப்பல்! இரண்டாவது பரிசு ஒரு வீடு!

ஓர் அடிமை மூன்றாவது பரிசு. வீட்டு வேலைகள் செய்வதற்கு நாலாவது பரிசு ஆடு... மாடு. ஐந்தாவது பரிசு கட்டைவண்டி. இப்படித்தான் அப்பொழுது பரிசுகள் வழங்கப்பட்டதாம்!

பணம் கொடுத்து லாட்டரி டிக்கட்டுகள் வாங்கும் முறை இங்கிலாந்திலேதான் அறிமுகமானது. இத்தாலி அரசாங்கம் லாட்டரி மூலம் கிடைத்த வருவாயை வைத்து அரசாங்கத்தையே நடத்தியதாம். புகழ்பெற்ற பிரிட்டிஷ் அருங்காட்சியகம் இருக்கிறதல்லவா? இங்கிலாந்து அரசாங்கம் இதை லாட்டரி வருவாய் மூலமாகத்தான் கட்டி முடித்ததாம்.

அமெரிக்காவிலேயுள்ள ஹர்வார்டு பல்கலைக்கழகம்... கொலம்பியா பல்கலைக்கழகம் இவையெல்லாம் ஆரம்பிப்பதற்கும் சிறப்பாக இயங்கி வருவதற்கும் லாட்டரி வருவாய்தான் மிகவும் உதவியாக இருந்ததாம்!

ரஷ்யாகூட, இரண்டாவது உலகப்போர் நடந்த சமயத்திலே மட்டும் லாட்டரி நடத்திவிடுகிறது.! இந்தியாவுக்குள்ளே இந்த லாட்டரிச் சீட்டு எப்படி நுழைந்தது?

1850 இல் இங்கே ஆங்கிலேய கவர்னராக இருந்தவர் சர்சார்லஸ் எட்வெர்ட்டிரிவேலியன்! அவர் தான் முதல் தடவையாக இந்தியாவிலே இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

சென்னையிலுள்ள ரிப்பன் மாளிகை மூர் மார்க்கட், மியூசியம்... இது போன்ற கட்டடங்களையெல்லாம் லாட்டரி வருமானத்தின் மூலமாகத்தான் கட்டி முடித்தார்களாம்!

சுதந்திர இந்தியாவிலே முதல் தடவையாக லாட்டரிச் சீட்டு அறிமுகமான மாநிலம் ஒரிசா. ஒரிசா அரசாங்கம் தான் அதை ஆரம்பித்தது... 1955க்குள் அதை நிறுத்தி விட்டார்கள். அதற்கப்புறம் 13 வருடத்துக்கு இந்தியாவில் லாட்டரிச் சீட்டே கிடையாது.

மறுபடியும் என்ன நடந்ததென்றால்... 1968 இல் முதலிலே கேரளாவில் ஆரம்பம்! அப்புறம் தமிழ் நாட்டிலே இது வந்தது! இப்பொழுது இது எல்லாருக்கும் அறிமுகமான ஒருவிடயம் எங்கே பார்த்தாலும் லாட்டரி மயம்!

ஒரு மனிதன் மிகவும் கவலையோடு உட்கார்ந்திருந்தான்... கடவுள் அவன் முன்னே தோன்றினார். 'ஏன் இப்படிக் கவலையோடு உட்கார்ந்திருக்கிறாய்?... உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்... தருகிறேன்' என்றார்.

'வேறு ஒன்றும் வேண்டாம்... எனக்கு லாட்டரிச் சீட்டிலே ஓர் இலட்சம் பரிசு விழுகிற மாதிரிச் செய்துவிடுங்கள்.. அது போதும் அதைவைத்துப் பிழைத்துக்கொள்வேன்' என்றான்.

'சரி... அப்படியே நடக்கும்... வரம் கொடுத்துவிட்டேன்' எனக்கூறிவிட்டுக் கடவுள் போய்விட்டார். கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் ஒருநாள் கடவுள் அங்கே வந்தார். அதே ஆசாமி மறுபடியும் தலையிலே கையை வைத்துக் கொண்டு கவலையோடு உட்கார்ந்திருந்தான்.

கடவுளைப் பார்த்ததும் கோபமாகக் கத்தினான். 'என்னை இப்படி ஏமாற்றி விட்டாயே... லாட்டரியில் இலட்சம் ரூபா விழுமென்று வரம் கொடுத்தாயே... எனக்கு விழவே இல்லையே...' என்று கத்தினான்.

கடவுள் நிதானமாகச் சொன்னார் 'தப்பு என் மேலே இல்லை... உன்மேலேதான்! ஓர் இலட்சம் ரூபா உனக்கு விழுவதற்கான அதிஷ்டத்தை நான் கொடுத்துவிட்டேன்... ஆனால் நீ... ஒரு ரூபா கொடுத்து சீட்டே வாங்கவில்லையே... சீட்டு வாங்காமல் உனக்கு எப்படி பரிசு விழும்?...' என்றாராம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# விடுதலைப்புலிகளின் வான்படை வளர்ச்சி இந்தியாவுக்கு கவலை அளிக்கிறது

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான் படை வளர்ச்சி இந்தியாவுக்கும் கவலையளிக்கும் விடயமாகும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்துள்ளார். இதுபற்றி அழுத்தமாக கூறிய அந்தோனி இலங்கைக்கு நியாயமான ஆதரவினை இந்தியா வழங்கும் எனத் தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவுடன் இடம்பெற்ற பேச்சுப்பற்றிக் கருத்துத் தெரிவித்த இந்திய பாதுகாப்பு அமைச்சர் முடிந்தளவு எந்த உதவியையும் செய்வதற்கு இந்தியாவுக்குள்ள விருப்பத்தினைத் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

இலங்கையின் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஒற்றுமை ஆகியவற்றில் 'நாங்கள் உங்களுடன் தான்' என்பதே இந்தியாவின் செய்தி எனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை அரசியல் தீர்வே இந்தி யாவின் விருப்பம் என்பதையும் தெரிவித்தார்.

பாக்குநீரிணையில் இரு நாட்டினதும் கடற்படையினரதும் கூட்டு ரோந்து பற்றி குறிப்பிட்ட அமைச்சர் அந்தோனி இந்தியா அதனைப் பரிசீலிக்கும் என்றார். இதுபற்றிக் குறிப் பிட்ட போகொல்லாகம சாதகமாகப் பரிசீலிப்பதாக அந்தோனி தெரிவித்தார் என்றார்.

ஆகவே இவ்விடயத்தில் ஒரு 'ஒப்பந்தம்' ஏற்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வரலாம். கூட்டுரோந்து விடயத்தில் எந்த விதமான உத்தரவாதமும் அளிக்கப்பட வில்லை என அந்தோனி தெரிவித்துள்ளார்.

கடற்புலிகளால், பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அச் சுறுத்தல் பற்றி மாநாட்டில் அமைச்சர் போகொலலாகம எடுத்துக் கூறினார். (அ-5)

# உள்ளூராட்சி சபைகளுக்கு 10 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ் குடாநாட்டில் உள்ள 13 உள்ளூராட்சி சபைகளுக்கும் இவ்வாண்டு 10 இலட்சம் ரூபா வீதம் . மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பிரமாண அடிப்படையில் மூலதன வேலைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச சபைக்கும் 10 இலட்சம் ரூபா வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சனசமூக நிலையம், முன்பள்ளி, கடைத்தொகுதி, சந்தைகள் மற்றும் நிர்மாண வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை கடந்த வருடம் பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத்திட்டத்திற்கு ரூபா 5 இலட்சம் மட்டுமே ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## தலைமைத்துவக் கருத்தரங்கு

கடந்த சனிக்கிழமை காலை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கல்லூரி மாணவ தலைவிகள் மற்றும் உயர்வகுப்பு மாணவிகள் அறுபது பேருக்கு தலைமைத்துவக் கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்குக்கு கல்லூரி அதிபர் திருமதி சு. ஜெயவீரசிங்கம் தலைமை தாங்கினார்.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா இக் கருத்தரங்கை நடாத்தி வைத்தார்.(அ)

## மஹோற்சவம்

யாழ். வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்பாள் திருக்கோவில் மஹோற்சவம் 6ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12ஆம் திகதி செவ்வாய்க் கிழமை விநாயகப்பெருமான் தீர்த்தோற்சவமும் 29ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8மணிக்கு இரதோற்சவமும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.(அ)

## இராசிபலன்

05.06.2007

வைகாசி 22. செவ்வாய்க்கிழமை

சதுர்த்தி மு.ப. 07.47 மணிவரை

பஞ்சமி மு.ப. 07.48 தொடக்கம்

உத்தராடம் முற்பகல் 11.17 மணிவரை

இராகுகாலம் 2.52–4.22 மணிவரை

சுபநேரம் 10.22– 11.52 மணிவரை

சித்தம்

**மேடம்:-** எடுத்தகாரியம் கைகூடும், அதிகாரம், நல்ல செய்தி, போசன சுகம்.

**இடபம்:-** கட்டுப்பாடு, சரீரப் பிரயாசை, வீண் பயம், எதிர்பாராத செலவு.

**மிதுனம்:-** பகைவர் தொல்லை, உடல் நலக் குறைவு ,முயற்சி தாமதம், பொருள் விரயம்.

**கடகம்:-** மனோதைரியம், போசன நன்மை, நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி.

**சிங்கம்:-** தேகாரோக்கியம், மன மகிழ்ச்சி, சத்துருஜெயம், காரிய அனுகூலம்.

**கன்னி:-** தாழ்ந்தசுபாவம், காரிய இடையூறு, பணக்குறைவு, புத்திரரால் கவலை.

**துலாம்:-** சுபநிகழ்வு, முயற்சி தாமதம் ,அதிஷ்டக் குறைவு, மனச்சந்தேசம்.

**விருச்சிகம்:-** இஷ்டசித்தி, சகோதரர் உதவி, பெருமையடைதல், பொருள் சேர்க்கை.

**தனுசு:-** கௌரவக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், அதிக செலவு, வீண் விவாதம்.

**மகரம்:-** மாதர் நட்பு ,போசன சுகம் , வெகுமானம், சயன சுகம்.

**கும்பம்:-** சுபசெலவு, பிரயாண அலைச்சல், வேலைச் சுமை ,ஆரோக்கியக் குறைவு.

**மீனம்:-** குடும்ப சுகம், தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு , முயற்சி கைகூடும்.

-வளவன்

## பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல: 672
தன்மை: மணநீக்கம்

மகேந்திரம் பெண் சிவதர்சினி
மறுநாமம் சுந்தரேஸ் மகள்
சிவதர்சினி.
23, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

வழக்காளி

-எதிர்-

மயில்வாகனம் மகேந்திரம்
கர்த்தர் கோவிலடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

எதிராளி

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 31ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும், வழக்காளி சார்பில் சட்டத்தரணி திரு.சபா ரவீந்திரன் அவர்களும் பிரசன்னமாயிருக்க, எதிராளி சமூக மின்றி எதிராளிக்கு "வலம்புரி" தேசிய பத்திரிகை மூலம் விளம்பரப் படுத்தல் மூலம் அழைப்புக்கட்டளை பதில் சேவகம் செய்யப்பட்டும், எதிராளி சமூகமளிக்கத் தவறியமையால் இவ்வழக்கு இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு, வழக்காளியின் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு.சபா ரவீந்திரன் அவர்கள் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றில் அனுமதியைக் கோரி, மன்றின் அனுமதியுடன் வழக்காளி யின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது, 'வ-1', 'வ-1.அ' ஆவணங்கள், வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து நீதிமன்றம் பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இவ்வழக்கில் வழங்கப்பட்ட வழங்காளியின் சாட்சியத்தையும், 'வ-1', வ-1.அ ஆவணங்களையும் வழக்கேட்டுடன் ஒப்பிட்டும் பார்க்கும் போது வழக்காளியை எதிராளி எதுவித காரணமுமின்றி வேண்டும் என்றே வன்ம உறவு அறுப்புச் செய்தார் என்ற திருமணக் குற்றத்தின் அடிப்படையில் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2001ஆம் ஆண்டு தை மாதம் 25ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை ரத்துச்செய்தும், வெற்றும் வெறிது மானதென கட்டளையிட்டு தீர்ப்பளிக்கிறேன்.

இவ்விவாகரத்து தீர்ப்பின் பிரகாரம் வழக்காளி தனது கன்னிப் பெயரான சுந்தரேஸ் மகள் சிவதர்சினி என்ற பெயரை பாவித்து வரவும், திருமணமாகாத பெண்களுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்கலாம் எனவும், அத்துடன் வழக்காளிக்கு இழப்பீடாக ரூபா 5,00, 000/- எதிராளி செலுத்த வேண்டுமென்றும் வழக்காளி இவ்வழக்குத் தொடர்பில் செலவுப் பட்டியலை மன்றில் பதிவாளரிடம் சமர்ப்பித்தால் வரியீடு செய்து வரும் தொகையை இவ் வழக்குச் செலவாக எதிராளி, வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கிறேன்.

இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதியை "வலம்புரி" தினசரி பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்து அதன் பின் மூன்று மாதங்களுக்குள் ஆட்சேபனை எதுவும் இல்லாத பட்சத்தில் இது முற்றான தீர்வை ஆக்கப்படலாம் என தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 31ஆம் திகதி.

வரைந்தது!
சபா ரவீந்திரன்
வழக்காளியின் சட்டத்தரணி

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி,
யாழ்ப்பாணம்.

து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

மாமி பெரியவள்; மருமகளும் பெரியவள்; பானை பொங்குகிறது; யார் பானையை இறக்கிவைப்பது?

-இந்தியா

வலம்புரி

# யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீடிப்பதால் என்ன இலாபம்?

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிக்குமென இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் அடுத்து வரும் இரு வாரங்களில் அரசு ஒரு தீர்க்கமான முடிபையெடுக்குமென அறிவித்திருந்தது.

அரசின் மேற்போந்த அறிவிப்பிற்கு முன்னால், யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதா? இல்லையா? என்ற முடிபை சர்வசன வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் பல்வேறு அறிவித்தல்களை அரசு வெளியிட்ட போதிலும் அது தொடர்பில் மக்கள் எதுவித அக்கறையும் கொள்ளவில்லை.

ஏனெனில், நடைமுறையில் இல்லாத ஒன்றுக்காக நேரத்தைச் செலவிட அவர்கள் விரும்பவில்லை. எனினும் உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிப்பதா? இல்லையா? என்ற முடிபை எடுப்பதற்காக சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதென ஜனாதிபதியும்,அடுத்துவரும் இரு வாரங்களில் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் இறுதியான முடிபு எடுக்கப்படுமென அரசும் அறிவித்திருப்பதற்குள் உள்நோக்கம் இல்லாமல் இல்லை.

அதாவது,அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை வெறும் காகித வடிவில் இருக்கிறதே அன்றி அது தற்போது கடைப்பிடிக்கப்படவில்லை.

நடைமுறையில் இல்லாத ஒன்றுக்கு அரசு அதீத முக்கியத்துவம் கொடுத்தது எதற்காக என்ற கேள்வி எழுகின்ற போது, அங்குதான் பேரினவாதக் கட்சிகளை சமாளிப்பதற்கான தேவை என்ற பதில் எழுகை பெறும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரத்துச் செய்யவேண்டுமென ஜே.வி.பி.,ஜாதிக ஹெல உறுமய ஆகியகட்சிகள் அரசைவலியுறுத்திவந்தன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக மகிந்தவும் மேற்போந்த இரண்டு இனவாதக்கட்சிகளும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம்,யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரத்துச் செய்வது ஒன்று.

அதனை நிறைவேற்ற ஜனாதிபதி தயங்கியதால் ஜே.வி.பியும் ,ஜாதிக ஹெல உறுமயவும் அரசுக்கு எதிராக செயற்படும் அளவுக்கு நிலைமையை மோசமாக்கியது.

இந் நிலையில் இரண்டு கட்சிகளையும் சமாளிப்பதற்காகவே யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரத்துச் செய்வது போன்ற தகவல்களை அரசு வெளியிட்டது.

எனினும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரத்துச் செய்யவேண்டுமென ஜே.வி.பி.,ஹெல உறுமய கேட்ட கால்லம் கடந்து, கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது விடுதலைப்புலிகளின் போர் விமானம் தாக்குதல் நடத்தும் காலம் வந்துவிட்டது.

இதனால் யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரத்துச் செய்வது குறித்து அந்த கட்சிகளுக்கு அக்கறையில்லாது போயிற்று.

இந் நிலையில் அரசின் அறிவிப்பும் தேவையற்றதாக கருதப்பட்டதால்,உடனடியாகவே ஒப்பந்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்ற அறிவிப்பை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ளது.

இந்த அறிவிப்பால்-உடன்படிக்கையால் யாருக்கும் எந்த லாபமும் ஏற்படப்போவதில்லையென்பது உறுதி.

# பிரஸ்லஸ்ஸில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு உயர் மட்டக்குழுவை அனுப்ப அரசு தயக்கம்

(கொழும்பு)

பிரஸ்லஸ்ஸில் இன்று நடைபெறவுள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் அபிவிருத்தி விவகாரக்குழுவின் ஆரம்ப கூட்டத் தொடருக்கு கீழ் மட்டத்திலான குழுவொன்றையே அரசாங்கம் அனுப்பிவைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சுயாதீனமான மனித உரிமைக்குழுக்கள் தமது பிரதிநிதித்துவதை வகிப்பதற்கு அனுமதிக்கும் நோக்கத்துடனேயே அரசாங்கம் இந்த முடிபை எடுத்துள்ளதாக உயர் வட்டாரங்களை ஆதாரங்காட்டி கொழும்பு நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

மனித உரிமைகள் அமைப்புக்களையும் வெளிநாடுகளில் பிரசாரங்களை மேற்கொள்பவர்களையும் அபிவிருத்தி விவகாரங்கள் தொடர்பாக இன்று நடைபெறவுள்ள கூட்டத்திற்கு பிரதிநிதித்துவம் வகிக்குமாறு அழைத்திருப்பதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்தி விவகாரக்குழு அதற்கு வழங்கப்பட்டிருக்கின்ற ஆணைக்கு அப்பால் சென்றுள்ளதாகவே அரசாங்கம் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பெருமளவு எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கும் இந்த கூட்டத்திற்கு மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான உயர் மட்டக்குழுவொன்றை அனுப்பிவைப்பதற்கு அரசாங்கம் முன்னர் தீர்மானித்திருந் தது.

மனித உரிமைகள் விவகாரங்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகள் குழுவினாலேயே கையாளப்படவேண்டும். அபிவிருத்தி விவகாரக்குழுவானது அபிவிருத்தி விவகாரங்கள் தொடர்பிலான இந்தக் கூட்டத்திற்கு மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகளை அழைத்திருப்பதன் பின்னணியில் தவறான நோக்கங்கள் இருக்கலாம் என்று அரசாங்கம் கருதுகிறது எனவும் அந்த உயர் வட்டாரம் மேலும் தெரிவித்தது.

இக் கூட்டத்திற்கு நான்கு பிரதிநிதிகளை இலங்கை சார்பில் அனுப்பிவைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது. வியன்னாவில் உள்ள இலங்கைத்தூதுவர் அருணி விஜயவர்த்தன மற்றும் புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு,சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஒவ்வொருவரையும் அனுப்பிவைக்கும் திட்டத்துடனேயே அரசாங்கம் இருந்தது.

இதேவேளை இன்று நடைபெறவுள்ள ஐரோப்பிய ஒன்றிய அபிவிருத்திக்குழுவின் பகிரங்க விசாரணையின்போது அரசுக்கு எதிராக கடுமையான கண்டனங்கள் முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

35 நாடுகள் அங்கம் வகிக்கும் அபிவிருத்திக்குழு இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவி தொடர்பாக ஆராயவுள்ளது.

இதன்போது பல உள்ளூர், அனைத்துலக அரச சார்பற்ற அமைப்புக்கள் கடும் விமர்சனத்தை முன்வைக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் கடந்த முதலாம் திகதி இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையை கடுமையாகக் கண்டிப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை வருமாறு, சின்னராசா சண்முகலிங்கம் மற்றும் கார்த்திகேசு சந்திரமோகன் ஆகிய இருவரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையில் பல ஆண்டுகள் சேவையாற்றியுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க தலைமையலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிப் பட்டறையில் பங்கு பற்றுவதற்காக கொழும்பு வந்திருந்தனர். அவர்கள் மட்டக்களப்புக்கு திரும்புவதற்காக கோட்டை புகையிரத நிலையத்தில் தங்கியிருந்த வேளையில் மாலை 6.45 மணியளவில் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

இக் கொடிய கொலையால் நாங்கள் அதிர்ச்சியடைந்துள்ளோம். எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களை அவர்களின் சக உறுப்பினர்களுக்கும் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் நெவில் நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை செஞ்சிலுவைச் சங்கம் உடனடியாக விசாரணை நடாத்துமாறு அரச அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் கொலை தடைசெய்யப்பட்டுள்ளதென்பதையும் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளோரை மதிக்கவேண்டும் என்பதையும் அவர்களது மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு ஊறு செய்வதிலிருந்து விலகி நிற்குமாறும் முரண்பட்டு நிற்கும் குழுக்களை சங்கம் கேட்டுக்கொள்கிறது.

மேலும் பொது மக்களுக்கு உதவுபவர்கள், சண்டையில் ஈடுபடாதவர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். (அ)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்; யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை, யா/மூளாய் அ.மி.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகின்றது.

யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்திற்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2.I,வகுப்பு 2.II (பட்டதாரியாக இருக்க வேண்டும்) ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, வகுப்பு 2.I,வகுப்பு 2.II (பட்டதாரி யாக இருக்கவேண்டும்)ஐ சேர்ந்தவர்களிடமிருந்தும் யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை , யா/ மூளாய் அ.மி.த.க. பாடசாலை ஆகிய இரு பாடசாலைக்கும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2.II,வகுப்பு III ஐ சேர்ந்தவர்களிடமிருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I ,வகுப்பு 2.I,வகுப்பு 2.II ஐ சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதிபர் பதவிக்கான விண்ணப்பத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## தனியான பிராந்திய அலகு மலையக மக்களுக்கு உருவாக்கவேண்டும்

# ம.ம.மு.வலியுறுத்தல்

(கொழும்பு)

மலையகத் தமிழர்கள் செறிந்து வாழும் மத்திய , ஊவா , சப்ரகமுவ மாகாணங்களை ஒன்றிணைத்து மலையக மக்களுக்கு தனியான பிராந்திய அலகு உருவாக்கப்படவேண்டும் என்று இன்று நடைபெறவுள்ள சர்வகட்சிக் குழுக்கூட்டத்தில் மலைய மக்கள் முன்னணி வலியுறுத்தவுள்ளது.

மத்திய ,ஊவா ,சப்ரகமுவ மாகாணங்களுக்கு வெளியில் வாழ்கின்ற மலையத் தமிழர்களின் மேம்பாடு மற்றும் அரசியல் ,கலாசார ,விவகாரங்களை ஒன்றிணைத்து இந்திய வம்சாவளி தமிழர்களுக்கென தேசியப்பேரவை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் மலையக மக்கள் முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வகட்சிக் குழுக் கூட்டம் அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையில் நடைபெறும்போது அக் கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் கலந்துகொள்ளவுள்ள கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான எஸ்.விஜயசந்திரன் மேற்கண்ட நிலைப்பாட்டை வலியுறுத்துவார் என்று ம.ம.மு.விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-5)

## எரிபொருட்களுக்கான வரியை உடனடியாக அரசு குறைக்க வேண்டும்

# ஜே.வி.பி.கோரிக்கை

(கொழும்பு)

எரிபொருட்களுக்காக விதிக்கப்பட்டுள்ள வரியை உடனடியாக குறைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம். ஒரு லீற்றர் பெற்றோலுக்கு அரசாங்கம் வரியாக 41 ரூபாவை அறவிடுகின்றது என்று ஜே.வி.பியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது; எரிபொருட்களின் விலைகள் வாரம் ஒரு தடவை அதிகரித்த வண்ணம் உள்ளன.எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கின்ற போது அதன் விளைவாக போக்குவரத்துத் தட்டணம் உட்பட பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றமை இயல்பாகும்.

இந் நிலையில் இலங்கையில் தொடர்ச்சியான எரிபொருட்களின் விலை அதிகரிப்பதால் வாழ்க்கைச்செலவு மின்னல் வேகத்தில் உயருகின்றது. இதனால் சாதாரண மக்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

ஆனால் அரசாங்கமோ நூற்றுக்கணக்கான அமைச்சர்களை வைத்துக்கொண்டு வீண்செலவுகளை அதிகரித்து வருகிறது. அதன் சுமை மக்களையே சென்றடைகிறது. அத்துடன் அமைச்சர்களும் சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். எனவே எரிபொருட்களுக்கான வரியை குறைக்குமாறு அரசாங்கத்திடம் கோருகின்றோம். (ச)

# ஆசிரியர் பயிற்சி நெறிக்கு நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

ஆசிரிய கலாசாலைகளுக்கு பயிற்சி நெறிக்கு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் இம் மாதம் 14 ஆம் ,15 ஆம் ,18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இலங்கையில் உள்ள பத்து ஆசிரியர் கலாசாலைகளிலும் 2007 /2008 கல்வியாண்டுக்கான காலப்பகுதியில் ஆசிரியர் பயிற்சி நெறிகளுக்கு பயிற்சி ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளன.

14 ஆம் திகதி வியாழக்கிழமை ,15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை , 18 ஆம் திகதி திங்கட்கிழமை மூன்று தினங்களும் நாடளாவிய ரீதியில் நேர்முகப்பரீட்சைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவு செய்துள்ளது.

கொழும்பில் மகரகம ஆசிரிய கலாசாலையிலும் வவுனியாவில் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் மட்டக்களப்பில் ஆசிரிய கலாசாலையிலும் யாழ்ப்பாணத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் நேர்முகப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன.ஆசிரிய கலாசாலைகளின் யூலை மாதம் பயிற்சி நெறிக்கான விரிவுரைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ)



தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமாப் பட்டத்தில் உயர் சித்தியடைந்தோருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் வைபவம் அலரிமாளிகையில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் டிப்ளோமாதாரி ஒருவருக்கு நியமனக் கடிதம் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோர் திருமலையில் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாப் பிரதேச செயலர் பிரிவில் சுனாமி பேரலைகளின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டோரில் ஒருபகுதியினர் தமக்கான வீடுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து பெரும் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர்.

இதேவேளை சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு தமது வீடுகளையிழந்த 80 குடும்பங்களுக்கு 'பீப்பிள் இன் நீட்' என்ற மக்கள் சேவைக்கான செக்கோஸ்லவேக்கிய நாட்டு தன்னார்வுத் தொண்டு நிறுவனம், ஒவ்வொன்றும் 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான 80 வீடுகளை கிண்ணியாப் பிரதேசத்தின் அண்ணல்நகர் பகுதியில் அமைத்துக் கொடுத்துள்ளது.

மீன்பிடித் தொழிலையே தமது பிரதான தொழிலாக மேற்கொண்டிருந்த இந்த மக்கள் தற்போதைய நிலையினால் தாங்கள் வறுமையில் வாடுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் நடராஜா, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளை மேற்கொள்ள 86 நிறுவனங்கள் வரை முன்வந்தன என்றும் ஆனால் இவற்றில் பல நிறுவனங்கள் காலைவாரியமையினால் இந்தப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் தடங்கல் ஏற்பட்டு வருவதாகக் கூறினார். (ச-3)

## கண்டியில் தற்கொலை அங்கி மீட்பு

(கொழும்பு)

கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு அருகில் தற்கொலைக் குண்டுதாரிகள் பயன்படுத்தக் கூடிய சீருடைத் தொகுதி ஒன்றையும் வெடிபொருள்களையும் நேற்றுப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கண்டிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலினையடுத்து போகம்பரை சிறைச்சாலையின்பின்புறத்தில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது தற்கொலைக் குண்டுதாரிகள் பயன்படுத்தும் சீருடைத் தொகுதியும் வயர் மற்றும் பற்றறி போன்ற பொருள்களும் மறைவிடம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. (ச-3)

## திருமலையில் ஆயுதங்கள் மீட்பு

திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளிலிருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது 20 கிளைமோர்க் குண்டுகளும் ஆயுதங்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை மட்டக்களப்பு பன்குடாவெளிப் பகுதியில் ஆயுதங்கள் பலவற்றை இராணுவத்தினர் மீட்டுள்ளனர் எனத் ஊடக மத்திய நிலையம் மேலும்தெரிவித்துள்ளது.(ச)

## யாழ்ப்பாணப் பெண்கள் இருவர் புத்தளத்தில் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு பெண்கள் புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் இருவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## நாட்டு நலனுக்காகச் சகலரும்...

லேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் ஜனாதிபதி மேலும் குறிப் பிட்டுள்ளதாவது,

இன, மத வேறுபாடுகளை மறந்து சகலரும் ஐக்கியப்படுவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். நிரந்தர சமாதானத்தின் மூலமே ஸ்திரமான பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் பெரும்பான்மையினரே இந்த ஜனநாயகக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந் நாட்டைப் பாதுகாப்பதற்கு நாம் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டையே ஆரம்பத்திலிருந்து நாம் கடைப்பிடித்து வந்தோம்.

குரோத அரசியல் செயற்பாடுகளின் விளைவுகளை நாம் அனுபவித்து வருகின்றோம். பல தசாப்தங்களாக இந் நாடு முகம் கொடுத்து வரும் வடக்கு மற்றும் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வினைக் கண்டு பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் உலக வரை படத்தில் இலங்கையை பிரதான நாடாக மாற்றுவதற்கும் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

பிளவுபடாத இலங்கை மற்றும் வளமான எதிர்காலம் என்ற சகலரினதும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதற்கான ஒரே யொரு வழி ஐக்கியமாகும்.

குரோத அரசியலை தூக்கி எறிந்து விட்டு நேசநலனுக்காக ஒன்றுபடுவதற்காக நாம் நீட்டிய கரங்களை ஐ.தே.க. ஜனநாயகக் குழு இதயபூர்வமாக ஏற்றுக் கொண்டது.

அரசுடன் இணைந்து கொள்வதற்காக இக்குழுவானது எந்தத் தனிப்பட்ட கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை. பயங்கரவாதத்திலிருந்து மக்களை மீட்டெடுத்து இரத்தக் களறியை நிறுத்துவதே இக் குழுவினரின் நோக்கமாகவிருந்தது எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## மன்னாரில்...

நடத்தி வந்தனர்.

இதன் காரணமாக மக்களின் வீடுகள் சேதமாகி வருகின்ற நிலையில், நேற்று கிபீர் விமானங்கள் நடத்திய தாக்குதல்களினால் பொதுமகன் ஒருவரின் வீடு முற்றாக சேதமடைந்துள்ளதுடன் இரு வீடுகள் பாதிப்புக்கும் உள்ளாகின என மன்னார் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு...

பாட்டின் பிரகாரம் கொண்டு வரப்படும் பொருள்களின் சகல விபரங்களும் அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

- அப்பொருள்கள் விற்பனை செய்வதற்கு முன்பதாகப் பொருள்களின் விற்பனை சம்பந்தமாகப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்த வர்த்தகத் தொழில் துறை மன்றம், அரசாங்க அதிபரின் ஆலோசனையுடன் விற்பனை விலையைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

இந் நடைமுறை பூரணப்படுத்தப்படும் வரை பொருள்கள் எதுவும் சந்தைப்படுத்த இயலாது.

- சகல வியாபார நிலையங்களிலும் இருப்பில் இருக்கும் முக்கியமான பொருள்களின் விலைப் பட்டியல் தெளிவான முறையில் பாவனையாளர்கள் பார்வையிடக் கூடிய இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.
- சகல விற்பனைகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட பற்றுச் சீட்டு பாவனையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
- ஜீவனோபாயத் திட்டத்திற்காக கொண்டு வரப்படும் பொருள்களுக்கு; உதாரணமாக கால்நடைத் தீவனம், கோழித் தீவனம், உரம், கிருமி நாசினி போன்ற பொருள்கள் கிரமமாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- யாழ்.மாவட்டத்திற்குப் பொருள்களைக் கொண்டு வருவதற்கான பட்டியல் தயாரிக்கப்படும் போது கொண்டு வரும் பொருள்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- பொருள்கள் கொண்டு வருவதற்கான அனுமதியைப் பெற்று அதற்குரிய பொருள்களைக் கொண்டு வராது ஒதுக்கப்பட்ட கப்பல் இடவசதிகளை வேறு நபர்களுக்கு விற்பவர்களுக்கு எதிர்காலத்தில் அந்த வசதி செய்து கொடுக்கப்பட மாட்டாது.
- எக்காரணம் கொண்டும் பொருள்களை பதுக்கி வைத்துத் தற்காலிக தட்டுப்பாட்டை உருவாக்கக் கூடாது.
- பொருள்கள் தட்டுப்பாடு என்ற காரணத்திற்காக இருப்பிலிருக்கும் பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்யக் கூடாது.
- இந்த நிபந்தனைகளை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகஸ்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இக் கூட்டத்தில் அரச அதிபர் க.கணேஷ் தெரிவிக்கையில்,

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துடன் செய்யப்பட்டுள்ள இணக்கப்பாடு அதேபோன்று யாழ்.மாவட்டத்தில் பாவனையாளர்களிடமிருந்து பல்வேறு இடங்களுக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகள் என்பவற்றைக் குறிப்பிட்டு கடந்த 01.06.2007 இல் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் கூட்டத்திலும் இவ் விடயம் அலசி ஆராயப்பட்டதாகவும் யாழ்.மாவட்ட விற்பனை விலைகள் சம்பந்தமாகப் பல்வேறு திருப்தியீனங்கள் வெளிக்காட்டப்பட்டதாகவும் தெரிவித்து, வர்த்தகர்கள் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுலாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினுடைய சட்ட அதிகாரங்களைப் பிரயோகித்து நடைமுறைத் தவறி நடக்கும் வியாபாரிகளின் இருப்புக்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் எனவும் தெரிவித்தார்.

எனவே சகல வியாபாரிகளும் தம்முடைய பொருள்களைக் கொண்டு வருவதற்கு உதவிகள் நல்கும் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து யாழ்.மாவட்டத்திற்குப் பொருள்கள் சீராக வருவதற்கான ஏற்பாட்டிற்குரிய ஒத்துழைப்புக்களை அனைவரும் நல்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், புகையிலை, பனை உற்பத்திப் பொருள்கள், வாழைப்பழம் போன்ற பொருள்களைக் கப்பல் மூலம் அனுப்பி வைப்பதற்கு சகலரும் தங்களாலான முயற்சிகளை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்திற்கு சமுகமளித்த அனைவருக்கும் இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அமுலாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற வர்த்தக நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் அரசாங்க அதிபரால் நன்றி தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## புலிகளின் செயற்பாடுகளை...

விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு அனைத்துலக ஆதரவைக் கோரிவரும் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து 'தமது அரசு வெளியேறாது என்ற தகவலை வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள வர்த்தகர்களையும் அரசையும் இலங்கையில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுத்து வருகின்ற போகொல்லாகம, றொய்ட்டர் செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியில் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

விடுதலைப்புலிகளை பேச்சுமேசையில் சந்திப்பதற்கு தயாராகவிருப்பதாகவும் பேச்சு உடனடியாக ஆரம்பிக்கப்பட்டாலும் அதனை வரவேற்பதாகவும் இதுபற்றி விடுதலைப்புலிகளின் பதிலுக்குக் காத்திருப்பதாகவும் றோகித போகொல்லாகம கூறினார்.

வான்புலிகள் பற்றிய கேள்விக்குப்பதிலளித்த றோகித போகொல்லாகம, விடுதலைப்புலிகள் சிறியதொரு விமானத்தை வைத்துக் கொண்டு குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் அவர்களின் விமானங்களை எதிர்கொள்ளும் வலிமை தம்மிடம் இருப்பதாகவும் அதனை ஏற்கனவே நிரூபித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

புலிகள் தமது செயற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கு சர்வதேச நாடுகள் இடமளிக்கக் கூடாது. புலிகளின் செயற்பாடுகளுக்கு நாட்டின் எல்லைகளையும் கடல் பிராந்தியங்களையும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு புலிகளுக்கு வாய்ப்பளிப்பது இலங்கை மக்களை சர்வதேச நாடுகள் பயங்கரவாதத்தின் பிடியில் தள்ளிவிடுவதற்குச் சமமானதாகும்.

இதற்காக சர்வதேச நாடுகளுடன் பல்வேறு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட வேண்டியுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சிங்கப்பூரிலுள்ள ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் றோகித போகொல்லாகம, இலங்கையின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எமக்கு ஏற்றதொரு உள்ளூர் தீர்வு வரைபை தயாரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத் தீர்வுத் திட்டம் சகல தரப்பினர்களின் அங்கீகாரத்தைப் பெற்றதாகவும் இலங்கைக்குப் பொருத்தமானதாகவும் அமையும்.

இதேவேளை சமாதானத்திற்கான நடவடிக்கைகளை நோர்வேத் தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் அதனை அடைவதற்கு புலிகள் தற்போது மேற்கொண்டு வரும் வன்முறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் வெளிவிவ கார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-3)

## வவுனியாவில் இருவர்...

ணர்கள் தேடிச் சென்றனர். பம்பைமடு படை முகாமுக்குச் சென்று கேட்ட போது முகாம் பொறுப்பதிகாரி அப்படி தாம் எவரையும் பிடிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் அவர்கள் இருந்ததை அங்கிருந்தவர்கள் உறுதி செய்தனர். ஆனால் நேற்று அவர்கள் சடலங்காக மீட்கப்பட்டுள்ளனர்.

வாரிக்குட்டியூரைச் சேர்ந்த சுப்பையா சிவகுரு (வயது-28) மற்றும் கிரிசாந்தலோசன் (வயது-38) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் என வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (ச)


தேவை

எமது நிறுவனத்திற்கு தையல் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு:-

றொசானி காமன்ஸ்
263/1 இராஜகாரிய லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

றொசானி காமன்ஸ்
சபாபதிப்பிள்ளை வீதி,
c/o வசந்தி,
புற்றுநோய் காப்பகம்
அருகாமை
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(C-130)





இப் பத்திரிகை வலம்புரி அச்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.